


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 17.11.2019


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்












## இந்திய நிகழ்வுகள்

- **"அக்னி 2" ஏவுகணை** முதல் முறையாக இரவில் ஏவப்பட்டு நவம்பர் 16, 2019 அன்று வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.
    - அணு ஆயுதத்தை தாங்கி கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து 2,000 கி.மீ **தொலைவில் இருக்கக் கூடிய இலக்கையும் துல்லியமாகத் தாக்கும் வல்லமை** படைத்த இந்த ஏவுகணை பாதுகாப்புப் படையில் ஏற்கனவே சேர்த்துக்கொள்ளப்பட்டது.
    - **செய்தி துளிகள் :**
        - 20 மீட்டர் நீளம், 17 டன் எடை கொண்ட இந்த ஏவுகணை, 1,000 கிலோ எடையுள்ள வெடிபொருளை தாங்கிச் செல்லும் திறன் படைத்ததாகும் என்று அந்த வட்டாரங்கள் கூறின.

## விளையாட்டு நிகழ்வுகள்

- வங்கதேசத்துக்கு எதிரான இந்தூர் டெஸ்டில் வெற்றி பெற்றதின் மூலம் **அதிக இன்னிங்ஸ் வெற்றி பெற்ற இந்திய கேப்டன் என்ற புதிய சாதனையை நிகழ்த்தி உள்ளார் விராட் கோலி.**
    - 10 இன்னிங்ஸ்களில் வெற்றி பெற்ற இந்திய கேப்டன் கோலி.
    - **செய்தி துளிகள் :**
        - அதிக இன்னிங்ஸ் வெற்றி பெற்ற கேப்டன்களில் விராட் கோலி தற்போது 7-ஆவது இடத்தில் உள்ளார்.
        - தென்னாப்பிரிக்க முன்னாள் கேப்டன் கிரேம் ஸ்மித் 22

இன்னிங்ஸ் வெற்றியுடன் முதலிடத்தில் உள்ளார்.

## நியமனங்கள்

- **திரிபுரா உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி அகில் அப்துல்ஹமீத் குரேஷி** நவம்பர் 16, 2019 அன்று பதவியேற்றார்.
    - அகர்தலாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் மாநில ஆளுநர் ரமேஷ் பயஸ், அகில் அப்துல்ஹமீத் குரேஷிக்கு பதவிப் பிரமாணம் மற்றும் ரகசிய காப்புப் பிரமாணம் செய்து வைத்தார்.
    - **செய்தி துளிகள் :**
        - மும்பை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த நீதிபதி குரேஷி திரிபுரா உயர்நீதிமன்றத்தின் ஐந்தாவது தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டார்.

## விருதுகள்

- இந்திய மணல் சிற்பக் கலைஞர்கள் **சுதர்சன் பட்நாயக்கருக்கு** இத்தாலியின் உயரிய விருதான **'கோல்டன் மணல் சிற்பக்கலை' விருது** வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதைப் பெற்ற முதல் இந்தியர் இவர் என்பது கூடுதல் பெருமைக்குரிய விஷயமாக உள்ளது.
    - ரஷிய கலைஞருடன் இணைந்து மகாத்மா காந்தியின் 10 அடி உயர மணல் சிற்பத்தை பட்நாயக் உருவாக்கினார்.
    - **செய்தி துளிகள் :**

- 60க்கும் மேற்பட்ட சர்வதேச மணல் சிற்பக்கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ள பட்நாயக், இந்தியாவுக்கு பல பரிசுகளை பெற்று தந்துள்ளார்.
- மணல் சிற்பக்கலையில் அவரது பங்களிப்பை பாராட்டி மத்திய அரசு ‘பத்மஸ்ரீ’ விருது வழங்கி கௌரவித்தது.

## முக்கிய தினங்கள்

- **நவம்பர் 16 தேசிய பத்திரிக்கையாளர் தினம்**
  - பிரஸ் கவுன்சில் ஆ∴ப் இந்தியா தொடங்கப்பட்ட தினமான நாள் இந்தியா முழுவதும் தேசிய பத்திரிக்கையாளர் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 1996 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 16 ஆம் நாள் இந்தியாவெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

We Shine Academy™

## திருக்குறள்

**குறள் எண் : 20**

அதிகாரம் : வான்சிறப்பு

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**

**வான்இன்று அமையாது ஒழுக்கு**

**விளக்கம்:** எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.